# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*


## மறுபிறப்பைக் குறித்ததான போதனை

**முன்னுரை :**

நாம் வாழும் உலகம் மதங்கள் நிறைந்ததாக உள்ளது. ஐக்கியநாடுகளில் மாத்திரம் 300–க்கும் அதிகமான மதப்பிரிவுகளும், 5000–க்கும் அதிகமான சமயக்கோட்பாடு முறைகளும் காணப்படுகின்றன. இதோடு சேர்ந்தாற்போல் இந்த அமைப்புச் சங்கங்கள், மதசம்பந்தமான ஒவ்வொரு தோற்றத்தையும் பகிரங்கமாகக் கூறுகின்ற, தெரிவிக்கின்ற பிரதிநிதியாக இருக்கின்றது. இருந்த போதிலும் மிகவும் குறைவான எண்ணிக்கையான அமைப்புச் சங்கங்கள் (சபை பிரிவுகள்) மாத்திரமே மனிதன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்திக் கூறுகின்றவைகளாய் அமைந்துள்ளன. யோவான் 3:3–8 வரை உள்ள வசனங்களில் இயேசுகிறிஸ்து ''நீ மறுபடியும் பிறக்கவேண்டும்'' என்ற சத்தியத்தை மிகவும் தெளிவாக கூறியிருக்கின்ற போதிலும், இந்த செய்தியானது பொதுவாக வருந்தத்தக்க முறையில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஆகையால் தான் இந்த முக்கிய வேதபோதனையை ஒருவராவது தவறாகப் புரிந்து கொள்ளாதபடிக்கு, யாவரும் மிகவும் தெளிவான முறையில் அறிந்துகொள்ளும் ஒரே நோக்கத்தோடு இந்த வேதபாடம் இப்படியாக தயாரிக்கப்பட்டுள்ளது. முடிவாக, ரோக்மா அனைத்து நாடுகளின் இலவச வேதபாடத்திட்டத்தில் தங்களை அங்கத்தினர்களாக்கிக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் உண்மையாகவே மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தோடும், ஜெபத்தோடும் இந்தப் பாடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

எந்த மதமும் மனுஷனுடைய தேவையை சந்திக்கப் போதுமானதாக இராதபடியினால் இந்தப்பாடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. கோடிக்கணக்கான பக்தியுடைய சபை அங்கத்தினர்கள் மற்றும் மத அனுசரனை முறைகளைப் பின்பற்றுபவர்களும் மறுபடியும் பிறக்காதவர்களாக இருக்கின்றார்கள். மறுபடியும் பிறக்காமலேயே ஞானஸ்நானம் எடுப்பதும், சபையில் அங்கமாகச் சேர்வதும், கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வதும் மற்றும் தசமபாகம் கொடுப்பதும் சாத்தியமானதாக உள்ளது. ஏதோ ஒன்றில் நம்பிக்கை இருந்தால் போதும் என்ற போதனையானது சமீபகாலத்தில் உலகத்தை தாக்கியுள்ளது. இதன் விளைவாக நம்முடைய சபைகளில் சுவிசேஷத்தினுடைய உண்மையை அறிந்தவர்களும், நம்புகிறவர்களுமாகிய கோடிக்கணக்கான பேர்கள் சபையின் உள்ளே வருகின்றார்கள், ஆனால் அவர்கள் மறுபிறப்பின் அனுபவம் இல்லாதவர்களாய் இருக்கின்றார்கள். ஆகையால் இன்று கிறிஸ்தவ சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டதும், தவறுதலாக புரிந்து கொண்டுள்ளதுமான இந்தப் போதனையை தெளிவுபடுத்துவது அவசியமாக இருக்கின்றபடியாலும், மறுபடியும் பிறவாவிட்டால் ஒருவன் பரலோகத்தை ''காணவும்'', ''பிரவேசிக்கவும்'' மாட்டான் என்பதை வலியுறுத்துவதாகவும் இப்பாடம் அமைந்திருப்பதால் இப்பாடத்தைவிட முக்கியத்துவம் வாய்ந்த பாடம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

**பாடம்**

## I. மறுஜென்மம் அல்லது மறுபிறப்பு என்பது வேதத்தின் ஒரு பொதுவான கருத்து :

**அ. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இதை தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார் :**

1. யோவான் 1:13, ''அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்சசித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்.''
2. யோவான் 3:3–8, ''ஒரு மனிதன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான்.''

   ''ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்.'' ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினாலே பிறப்பது ஆவியாயிருக்கும்.'' ''நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உங்களுக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்.''

**ஆ. புதிய ஏற்பாட்டில் நிருபங்களை எழுதிய எழுத்தாளர்கள் எல்லாருமே மறுபடியும் பிறக்கவேண்டியதன் அவசியத்தை போதித்துள்ளதைக் காணலாம் :**

1. யாக்கோபு 1:18 – ''அவர் (இயேசு) சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்தியவசனத்தினாலே ஜெநிப்பித்தார்.''

2. 1 பேதுரு 1:23 – “அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.”
3. 1 யோவான் 2:29 – “நீதியைச் செய்கிறவனெவனும் தேவனால் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்.”
4. பவுலும் கூட இதே சத்தியத்தை தன்னுடைய சொந்த சொற்களில் உபயோகப்படுத்தியுள்ளதைக் காணலாம்.
   1. ரோமர் 6:4 – “நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படியாக . . .”
   2. 2 கொரிந்தியர் 5:17 – “ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் . . .”

## II. இங்கு குறிக்கப்பட்ட வசனங்கள் மூலமாகக் கிடைக்கக்கூடிய செய்தி என்ன?

அ. மறுபடியும் பிறப்பது என்பது உண்மையானதாகவே இருக்கிறது! உன்னுடைய இயல்பான பிறப்பு எப்படியோ, அதைப் போன்ற ஆனால் அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய பிறப்பு, தேவனாலே உண்டான பிறப்பு, ஒரு ஆவிக்குரிய பிறப்பாகிய மறுபிறப்பு நிச்சயமாக உண்டு.

ஆ. கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கின்ற எல்லா ஜனங்களும் (இதுவரை இரட்சிக்கப்படாதவர்கள்) தேவனுடைய பார்வையிலே மரித்தவர்களாகவே காணப்படுகிறார்கள் என்றும் (எபேசியர் 2:1,5) அவர்களுக்கு ஜீவன் அத்தியாவசியமான தேவை (1 யோவான் 5:12) என்றும் காண்கிறோம்.

இ. ஒவ்வொருவரும் மறுப்பிறப்படைய முடியும் – மறுபிறப்படைய வேண்டுவது அவசியம்.

ஈ. ஒரு முழுமையான புதிய வாழ்வு எல்லாருக்குள்ளும் நிகழக்கூடியதாகவும், பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

உ. இவ்விதமாக செய்ய விரும்பும் ஒருவருடைய இருதயத்தில் கிறிஸ்து வரும் வரைக்கும் இந்த ஜீவன் ஆரம்பமாக முடியாது.

ஊ. இதோடுகூட, கீழே சொல்லப்பட்ட வாக்கியங்கள் கிறிஸ்தவம் என்றால் எப்படி இருக்கிறது என்பதை தெளிவாக நமக்கு எடுத்துக்கூறுகின்றது.

**கிறிஸ்தவம் என்பது :**

1. கொள்கைகள் அடங்கிய பட்டியல் அல்ல.
2. ஒரு ஒழுங்குமுறை நீதிநூல் அல்ல.
3. உதாரகுணங்களின் அந்தஸ்து அல்ல.
4. சண்டையிடுகின்ற அடிப்படைத் தத்துவமுடையது அல்ல.
5. எதிர்க்கும் தன்மையுள்ள வைதீகத் தன்மை உடையது அல்ல.
6. மத சாஸ்திரமல்ல.

**ஆனால் கிறிஸ்தவம் என்பது “வாழ்வு”**

புதிய பிறப்பு என்றால் அது புதிய வாழ்க்கை என்று அர்த்தப்படும். “நானோ நீங்கள் ஜீவன் பெற்றுக்கொள்ளும்படியாக வந்தேன்” என்று இயேசுகிறிஸ்து சொன்னார் (யோவான் 10:10).

## III. மறுபிறப்பின் அர்த்தம் :

மறுபிறப்பு என்பது என்ன அர்த்தமுடையதாயிருக்கிறது?

**அ. எது ‘மறுபிறப்பு அல்ல’ என்று காட்டக்கூடிய மூன்று காரியங்கள் உண்டு (யோவான் 1:13).**

**1. “இரத்தத்தினால் அல்ல” :**

யூதர்கள் தங்கள் வம்ச பரம்பரையில், அவர்களுடைய குலத்தில், அவர்கள் இரத்தசம்பந்தமான வரிசையில் பெருமை உடையவர்கள். “நாங்கள் ஆபிரகாமின் வித்து” (யோவான் 8:33) என்றும், “ஆபிரகாம் எங்கள் தகப்பன்” (யோவான் 8:39) என்றும் அவர்கள் கூறினார்கள். இன்றும் கோடிக்கணக்கான ஜனங்கள் தங்கள் வம்ச பரம்பரையில், தங்கள் இரத்த சம்பந்தமான வரிசை அல்லது பரம்பரை உணர்வு ஆகியவை அவர்களுக்கு சிறப்பான ஒரு சலுகையையும், அந்தஸ்தையும் கொடுக்கின்றது என்ற பெருமையில் இருக்கின்றார்கள். இங்கே ஆண்டவர் என்ன சொல்லுகிறார் என்றால், “உன்னுடைய இரத்தசம்பந்தமான வரிசை, உன்னுடைய அந்தஸ்து, உனக்கு சமுதாயத்தில் இருக்கிற ஸ்தானம்” அல்ல, “நீ மறுபடியும் பிறக்கவேண்டும்.” நீ எவ்வளவு உயர்வான அந்தஸ்திலிருந்து பிறந்தாய் என்பதல்ல விஷயம், நீ உன்னதத்திலுள்ள மறுபிறப்பினால் மறுபடியும் பிறந்திருக்கிறாயா? என்பதுதான் விஷயமாய் இருக்கிறது.

**2. ''மாம்ச சித்தத்தினால் அல்ல'' :**

i) யோவான் 3:6 – ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்.''

ii) ரோமர் 8:8 – ''மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்க மாட்டார்கள்.''

iii) ஆகையினால் இங்கே மாம்சம் என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறதென்றால், மனிதன் கிறிஸ்து இல்லாமல் தான் செய்கின்ற சகலகாரியங்களையும் குறிக்கிறது. ஒரு மனிதன் தன்னுடைய மாம்சத்தினாலே அநேக காரியங்களை செய்து முடிக்க முடியும். ஒரு மனிதன் கீர்த்தி வாய்ந்த (புகழ் பெற்ற) எழுத்தாளராக, ஒரு மேம்பட்ட விளையாட்டு வீரனாக, ஒரு தலைசிறந்த ஓவியனாக, ஒரு அழகிய இசையமைப்பாளராக, ஒரு பெரிய ராஜதந்திரியாக, ஒரு புத்திநுட்பமுள்ள வியாபாரியாக அல்லது ஒரு நீதி சம்பந்தமான மந்திரியாக இருந்தாலும் மறுபடியும் பிறவாதவனாய் இருக்கிறான். மாம்சத்தினாலே செய்யப் படுகின்ற காரியங்கள் இன்றும் மாம்சமாகவே இருப்பதினால் அவைகளால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது.

**3. ''மனுஷனுடைய சித்தத்தினால் அல்ல'' :**

இதை வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் 'புதியவாழ்வு' என்பது மனிதனிலிருந்து வருவது அல்ல, ஆனால் அது தேவனிடத்திலிருந்து வருகிறது. ஒரு மதகுருவோ அல்லது போதகரோ உன்னை இரட்சிக்க முடியாது. மனிதன் கையாளுகின்ற மதச்சடங்கு, ஞானஸ்நானம், திருவிருந்து மற்றும் எந்தவிதமான காரியங்களினாலும் உன்னால் மறுபடியும் பிறக்க முடியாது. ஒரு மனிதனும் உன்னை இரட்சிக்க முடியாது.

**ஆ. ஆகையால் 'புதிய பிறப்பு' அல்லது 'மறுபடியும் பிறப்பது' என்பது கீழே சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு எதிர்மாறான அர்த்தமுடையது :**

1. ஒரு சாதாரண மதசம்பந்தமான பொறுப்பு.
2. ஒரு ஆழமான, தனிப்பட்ட திடமான நோக்கம் அல்லது தீர்மானம்.
3. ஒரு மதசம்பந்தமான எந்த ஒரு செயலும் – அதாவது ஜெபித்தல், தசமபாகம் கொடுத்தல், தன்னையே ஒறுத்தல் அல்லது சபையில் சேர்தல்.
4. ஒரு மதசம்பந்தமான சடங்கு, பிரார்த்தனை அல்லது மரபு முறைகள்.
5. ஒரு சாதாரண சீர்திருத்தம் அல்லது நல்வழிபாட்டிற்கு மாறுவது.
   நமக்கு ஒரு புதிய வாழ்வு அவசியம் – புதிய வழிபாடு அல்ல.

**இ. ஆனால், நிச்சயமாக 'புதியவாழ்வு' இவ்விதமாயிருக்கிறது :**

1. **அது தேவனுடைய கிரியையாக இருக்கிறது** – யோவான் 1:13 ''தேவனாலே பிறந்தவர்கள்.''

**குறிப்பு :**

1 யோவான் 5:1 கூறுகிறது, ''இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்.'' மறுபடியும் பிறப்பது என்பது, நாம் ஆண்டவருக்காக ஏதோ ஒன்றை செய்ததின் பலன் அல்ல. ஆனால் ஒட்டு மொத்தமாக ஆண்டவர் நமக்காக செய்த காரியமாக இருக்கிறது.

2. **ஒரு உயிர்த்தெழுதல்** – யோவான் 3:6, 6:53; ரோமர் 6:4; எபேசியர் 2:1–5– ஐ வாசித்து படிக்கவும்.

**குறிப்பு :**

i) நமக்குள்ளே உண்டாகிறது என்பது நம்முடைய ஆவியில் உண்டாகிறதாயிருக்கிறது. புதிய வாழ்வு என்பது நமக்குள்ளே மரித்துப்போயிருக்கின்றதை வாழ்வுக்கு கொண்டு வருகின்றது. ''மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்'' (எபேசியர் 2:1).

ii) ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் தன் ஆவியிலே மரித்தவனாய் இருக்கின்றான்; மனிதனுக்குள்ளே இருக்கக்கூடிய ஆவியானது அவனாலே அறிந்தும், உணரக்கூடியதுமாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 2:11–14–ஐ வாசிக்கவும்).

iii) ஆவிக்குரிய நிலையில் மனிதன் மரித்தவனாய் இருக்கின்றான் (எபேசியர் 2:5). அப்படிப்பட்ட மனிதன் ஆவிக்குரிய காரியங்களை பார்க்கவும், உணரவும் முடியாதவனாய் இருக்கின்றான் (யோவான் 3:3–5; 1 கொரிந்தியர் 2:14).

iv) அப்படியானால் புதிய வாழ்வு என்று சொல்வது, ஆண்டவருடைய வல்லமையான செயலினால், ஆண்டவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தஆவியானவர் மூலமாக, நம்முடைய ஆவியை உயிரடையச்

செய்கிறார். நம்முடைய ஆவிக்குரிய உணர்வுகள் அவராலே புதிதாக்கப்படுகின்றபடியால் அதன் மூலமாக நாம் அறியவும், நேசிக்கவும், அவருக்காக சேவை செய்யவும் திறமையுள்வர்களாகின்றோம்.

3. **ஒரு சிருஷ்டிப்பின் கிரியை :** நாம் முன்பு அடைந்துகொள்ளாத ஒரு முழுமையான புதிய வாழ்வை நமக்குள்ளே சிருஷ்டிப்பதும், உருவாக்குகிறதுமாய் இருக்கிறது.

   எபேசியர் 2:10, ‘‘நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு…’’

   எபேசியர் 4:24, ‘‘மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.’’

   2 கொரிந்தியர் 5:17, ‘‘ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்.’’

4. **தேவனுடைய திவ்விய சுபாவத்தை பெற்றுக்கொள்வதும், பங்குகொள்வதும் :**

   2 பேதுரு 1:4, ‘‘திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு…’’

   கலாத்தியர் 2:20, ‘‘இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்’’

   எபேசியர் 3:17, ‘‘விசுவவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்…’’

   தேவனுடைய வல்லமையான செயலின்படி உண்மையாகவே கிறிஸ்து நமக்குள்ளே ‘உருவாக்கும் அதிசயமே’ புதிய பிறப்பு ஆகும்.

5. **வாழ்வு :** புதிய பிறப்பு என்பது ‘வாழ்வு’–உண்மையான வாழ்வு, நிஜமானவாழ்வு, நித்தியமான, மகிமையான, தெய்வீக வாழ்வு புதியதும், ஆச்சரியமுமான வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய ஒட்டு மொத்தமான புதிய வாழ்வு.

   1 யோவான் 5:12, ‘‘குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்.’’

   யோவான் 20:31, ‘‘விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும்’’

   யோவான் 10:10, ‘‘நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் வந்தேன்.’’

## IV. மறுபிறப்பின் அவசியம் : இயேசு சொன்னார் ‘நீ மறுபடியும் பிறக்கவேண்டும்’ (யோவான் 3:3–8) ஏன்?

### அ. ஏனென்றால் மறுபிறப்பைத்தவிர வேறு ஒன்றும் போதுமானதாக இல்லை:

1. உண்மையில் கிறிஸ்து அற்ற மதம் அல்லது மறுபிறப்பு அற்ற மதம், இரட்சிப்பின் நிச்சயமற்ற சமய சட்டதிட்டத்தின்கீழ் மனிதனை வைத்து அவன் சமாதானத்தை திருடுகிறது. மறுபிறப்பு இல்லாமல் அங்கே இளைப்பாறுதல் இல்லை, நீடித்து நிற்கக்கூடிய நிச்சயம் இல்லை, பூரணமான சமாதானம் இல்லை மற்றும் பாதுகாப்பின் உணர்வும் இல்லை. பாடல் எழுதுகின்ற ஒருவர் பின்வருமாறு எழுதுகின்றார் :

   ‘‘என் பயங்கள் அடங்கி–என் நம்பிக்கை உயர

   ஓராயிரம் வழிகளை முயன்று பார்த்தும் அது விருதாவாயிற்று

   ஆனால் எனக்கு தேவை எப்போதும்

   இயேசு மாத்திரமே.’’

2. விசுவாசத்திற்கான அதிகாரப்பூர்வமான அடிப்படையாக எதுவும் கொடுக்கிறதில்லை. ‘மதம் மாத்திரமே’ என்பது மனிதனுடைய முயற்சியையும், புண்ணியத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ‘புதிய பிறப்பு’ என்பது ஆண்டவருடைய வசனத்திற்கு கீழ்படிதலை அடிப்படையாகக் கொண்டது.

3. புதிய பிறப்பிற்குப் பதிலாக வேறு எதுவும் நம்முடைய கடந்தகால பாவங்களை அகற்றுவதில்லை. சீர்திருத்தம் என்பது ஒரு சிறந்த வாழ்கை செய்ய உதவலாம், ஆனால் மறுபிறப்பு மட்டுமே ஒரு மனிதனுக்கு அவனுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு முழுவதும் அகற்றப்பட்டது என்ற நிச்சயத்தைக் கொடுக்கிறது (எபிரெயர் 9:26; எபேசியர் 1:7).

4. ‘சீர்திருத்தம்’ அல்லது ‘மதம்’ ஒரு மனிதனுடைய வெளியரங்கமான தோற்றத்தை மாற்றலாம், ஆனால் ‘புதியபிறப்பு’ மட்டுமே மனிதனுடைய இருதயத்தை மாற்றும்.

<u>குறிப்பு :</u>

நீர் தேங்கி நிற்கும் குட்டையை சுற்றிலும் பூக்கள் வைப்பதால் குட்டையை மாற்ற முடியாது அல்லது ஒருவகைக் கரையானால் அரிக்கப்பட்ட கட்டிடத்தை வர்ணம் பூசவதன் மூலம் காக்கமுடியாது.

**ஆ. ஏனென்றால் புதிய பிறப்பைத் தவிர வேறு எதையாகிலும் ஆதாரமாகக் கொள்வது ஆபத்தும், அழிவுமாகும் :**

1. தேவனுடைய பரிசுத்தத்தை சிந்திக்கத் தவறுகிற வேறு எதுவும் (எபிரெயர்12:14).
2. தேவனுடைய வார்த்தையைவிட்டு மாற்றுவழியில் போவது அல்லது அசட்டை செய்து, வேதவசனத்தினுடைய நேர்மையை கேள்விகேட்கின்ற மற்ற எதுவும்.
3. நாம் பிழைத்திருக்கும்படிக்கு கிறிஸ்து மரித்த சிலுவையைக் குறித்து பரியாசம் செய்கின்ற எதுவும் (கலாத்தியர் 1:4).
4. நம்மை மறுபடியும் பிறக்கவைத்த பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மையையும், அவருடைய ஊழியத்தையும் அசட்டையாக எண்ணி தள்ளிப்போடுகின்ற எதுவும் (யோவான் 3:5,8; 6:63; 1 பேதுரு 1:22).
5. கிறிஸ்துவற்ற மனிதனுடைய இயல்பு எப்படிப்பட்டது என்பதை முழுமையாக உணர்ந்து அல்லது அறிய தவறுகிற வேறு எதுவும்.
   i) நம்முடைய சித்தம் நெறி தவறியதாக உள்ளது (ரோமர் 8:7; கொலோசெயர் 1:21).
   ii) நம்முடைய கிரியைகள் நேர்மையற்றதாய் இருக்கிறது (யோவான் 3:19).
   iii) நம்முடைய சிந்தை குருடாக்கப்பட்டதாயிருக்கிறது (எபேசியர் 4:18; 1 கொரிந்தியர் 2:9–14).
6. பெருமையை ஊக்குவிக்கின்ற வேறு எதுவும்.

குறிப்பு :

காயீனுடைய சொந்தக் கிரியைகள் தேவனாலே புறக்கணிக்கப்பட்டதால் தன்னுடைய பெருமையாலும், கோபத்தாலும் தன் சகோதரனாகிய ஆபேலை கொலைசெய்தான்.

**இ. கிறிஸ்து இதை உரிமையுடன் கேட்கிறார் (யோவான் 3:3–8).**

குறிப்பு :

வேதத்தில் உள்ள காரியங்கள் ஒன்றுகூட தற்செயல் அல்லது எதிர்பாராதவிதமாக நடந்த செயல் அல்ல. கிறிஸ்து நிக்கொதேமுவை மறுபிறப்பின் அவசியத்தை போதிக்கும்படி தெரிந்துகொண்ட இந்த உண்மை சாதாரண யதேச்சையாக ஏற்பட்ட நிகழ்ச்சியாக இருக்கவில்லை. நிக்கொதேமு சாதாரணமான பாவி அல்ல. காணப்பட்ட வர்களில் அவன் மிகவும் நல்லவராக இருந்தார். அவர் நற்பண்புள்ளவர், படித்தவர், ஆழ்ந்த மதபக்தர் மற்றும் உண்மையுள்ளவர். அவர் ஒரு அரசாட்சி செய்யக்கூடியவராக, தலைவாரக, ஒரு தேவாலய மனிதராகவும், பெரிய செல்வாக்கு படைத்த மனிதாகவும் இருந்தார். அவர் ஒரு மாதிரியான மனிதன். சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய எல்லாவற்றையும் உடையவாக இருந்தார். இவ்வளவு இருந்தபோதிலும் அவரைப் பார்த்து இயேசு சொன்னது “நீ மறுபடியும் பிறக்க வேண்டும்.” இதனுடைய தெளிவான தாற்பரியம் என்னவென்றால், நிக்கொதேமுவைப்போல் உள்ள மனுஷனே மறுபடியும் பிறக்க வேண்டுமானால், இந்த உலகில் உள்ள எல்லாருமே மறுபடியும் பிறக்க வேண்டியது எவ்வளவு அவசியம்!

## V. அடையாளம் :

மறுபடியும் பிறந்தேன் என்று சொல்லக்கூடிய ஒருவர் என்ன அடையாளங்கள் உடையவராய் இருக்கவேண்டும்? அநேகம் உள்ளது. ஆனால் நான் ஆறு காரியங்களை மட்டும் பெயரிடுகிறேன்.

**அ. கீழ்ப்படிதலின் அடையாளம் :**

(1 யோவான் 2:3) ஆண்டவருக்கும் அவருடைய சித்தத்திற்கும் கீழ்படிய வேண்டுமென்ற ஒரு திட்டவட்டமான ஆசை இருக்கும். கிறிஸ்துவினுடைய மாதிரியை பிலிப்பியர்2:5–8 ல் பார்க்கவும்.

**ஆ. பிரித்தெடுக்கப்பட்ட அடையாளம் :**

(1 யோவான் 2:15–17) ஒருவன் இந்த உலகத்தில் இன்னும் ஜீவித்திருக்கும்போது இந்த உலகத்திற்காக நான் ஜீவிக்கவில்லை என்பதையும் இந்த உலகின் மாயையான பாவத்திற்கும் நீங்கலாக பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றேன் என்ற தெளிவான அறிவும் உடையவனாக இருப்பான் (ரோமர்12:1,2; யோவான்15:18,16).

**இ. தொடர்ந்து செல்வதின் அடையாளம் :**

(1 யோவான் 2:19) விசுவாசத்தில் தொடர்ந்து செல்வது உண்மையான மாறுதலின் அடையாளம் (அப்போஸ்தலர் 2:42; யோவான் 8:32 வாசிக்கவும்).

**ஈ. நடைமுறை நீதியும், மற்றும் பரிசுத்த வாழ்வின் அடையாளமும் :**

1 யோவான் 2:29; 3:6 மறுபடியும் பிறந்த ஒருவன் சரியானதைச் செய்வான். 1 யோவான் 3:6–ல் சொல்லப்பட்ட 'பாவஞ் செய்கிறவன்' என்பது ''பாவத்தை தொடர்ந்து செய்கிற பழக்கமுடையவன்'' என்று பொருள். மறுபடியும் பிறந்த ஒருவன் எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தவறுவான், தோற்றுப்போவான், ஆனால் பாவம் செய்கின்ற பழக்கம் உடையவனாக இருக்கமாட்டான்.

**உ. அன்பின் அடையாளம் :**

(1 யோவான் 3:14; 1 பேதுரு 1;22; கலாத்தியர் 5:22; யோவான் 13:35) உண்மையாகவே மறுபடியும் பிறந்த ஒருவனிடத்தில், மற்ற கிறிஸ்தவர்கள் மீதான ஒரு அன்பு, தேவனுடைய வார்த்தையின் மேல் அன்பு, பிற ஆத்துமாக்களுக்கான அன்பு ஆகிய குணாதிசயங்கள் காணப்படும்.

**ஊ. புதிதான வாழ்வின் அடையாளம் :**

(2 கொரிந்தியர் 5:17; ரோமர் 6:4) உண்மையிலே மறுபடியும் பிறந்த ஒருவனில் மதிக்கத்தக்க புதிய மதிப்பீடுகள், புதிய நோக்கங்கள், புதிய பற்றுறுதி, புதிய மனோநிலை, புதிய அன்பு, வாழ்வின் மேல் புதிய தோற்றம், புதிய பழக்கவழக்கங்கள் புதிய இலக்கு, புதிய சமாதானம், புதிய மகிழ்ச்சி மற்றும் புதிய பெலன் ஆகிய இவைகளை உடையனவாகிறான். உண்மையாகவே ''பழைய காரியங்கள் எல்லாம் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.''

## VI. முறை :

மறுபிறப்பு என்கின்ற இந்த அற்புதம் எங்கே, எப்போது ஒரு மனிதனின் இருதயத்திலும், வாழ்விலும் இடம்பெறுகிறது?

**அ. முதலாவது நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவர தேவன் கிரியை செய்கிறார். அவர் இரண்டு ஏதுக்களை பயன்படுத்துகிறார் :**

1. **பரிசுத்த ஆவி :**

   (1 யோவான் 3:5,6,8; 6:63; 16:8; ரோமர் 8:16; தீத்து 3:5,6 ஆகிய பாகங்களை கவனமாக வாசிக்கவும்)

   பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மறுபிறப்பில் பெரிய பங்கு வகிக்கிறார்.

   i) நம்முடைய பாவத்தைக் குறித்து அவர் கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:8–9).

   ii) நம்முடைய ஒரே நம்பிக்கையாக கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார் (யோவான் 16:13–14).

   iii) அவர் நம்மை மனந்திரும்பும்படி தூண்டுகிறவராய் இருக்கிறார் (அப்போஸ்தலர் 2:37,38).

2. **தேவனுடைய வார்த்தை :**

   (ரோமர் 10:17; யாக்கோபு 1:18; 1 பேதுரு 1:22,23, எபிரெயர் 4:12; மாற்கு 4:20 ஆகியவற்றைக் கவனமாய் வாசிக்கவும்)

   தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும், பிரதானமாக தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதன் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார், கிறிஸ்துவை வெளிப்படுத்துவார், வாழ்வை தெரிவிக்கிறார், இரட்சிப்பின் நிச்சயத்தையும் அளிக்கிறார் (யோவான் 3:5; ரோமர் 8:16).

**ஆ. கிறிஸ்துவை வெளிப்படுத்தும் வல்லமை, பரிசுத்த ஆவியானவருடைய உணர்த்துதல், அறிவுறுத்தல் இவற்றின் விளைவாக மனிதன் செயல்படுகிறான்.**

1. நாம் மனந்திரும்பி (ஒருவனுடைய சிந்தை முற்றிலுமாக மாற்றப்படவேண்டும்) தேவனிடத்தில் திரும்ப வேண்டும் (மத்தேயு 9:13; லூக்கா 6:32; 13:3; 24:47; அப்போஸ்தலர் 17:30; 20:21; 26:20 ஆகியவற்றை கவனமாக வாசிக்கவும்).
2. நாம் கிறிஸ்துவண்டை வருவதற்கு நம்முடைய சித்தம் செயலாக்கப்பட வேண்டும்.

   i) யோவான் 5:40, ''உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை.''

   ii) யோவான் 7:17, ''அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறது என்று அறிந்துகொள்ளுவான்.''

   iii) வெளி. 22:17, ''விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.''

3. நம்முடைய விசுவாசம் புறப்பட்டுப்போய், கிறிஸ்துவையும், இரட்சிப்பின் வாக்குத்தத்தங்களையும் பற்றிப்பிடிக்க வேண்டும்.

   i) ''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்களில் வாசமாயிருக்கவும்...'' (எபேசியர் 3:17).

   ii) ''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்'' (அப்போஸ்தலர் 16:31).

iii) ''தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும்'' பவுல் பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 20:21).

iv) யோவான் 3:16,36; 6:47; ரோமர் 5:1–வாசிக்கவும்.

4. மனந்திரும்புதல், விசுவாசம் இவற்றின் மூலமாக தேவனுடைய வார்த்தையை நாம் ஏற்றுக்கொள்வதால் மறுபடியும் பிறக்கிறோம்.

<u>**குறிப்பு :**</u>

மாற்கு 4:20 , ''வசனத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டவர்கள்'' மாத்திரமே உண்மையான கிறிஸ்தவர்கள் – நல்ல விதைகள். அப்போஸ்தலர் 2:41, ''அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' யோவான் 1:12, ''அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ...''

விசுவாசத்தினால் நாம் எழுதப்பட்ட வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுவதன் மூலமாக ஜீவவார்த்தையான கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இவ்விதமாய் மறுபடியும் பிறக்கிறோம்.

**முடிவுரை :**

இதுவரை நீங்கள் உங்களுடைய பாவத்திலிருந்து மனந்திரும்பி ஆண்டவரண்டை வராதிருந்தால், இதுவரை கிறிஸ்துவையும் அவரைக் குறித்ததான வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளாதிருந்தால், ஜெபத்துடன் அதை இப்பொழுதே செய்யுங்கள். அப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளான முழுமையான புதிய வாழ்வின் சந்தோஷத்தை இன்றே அறிந்து கொள்வீர்கள்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# மறுபிறப்பைக் குறித்ததான போதனை

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. மறுபிறப்பைக் குறித்ததான பாடம் முக்கியமானது ஏன் ?
   a. தேவன் அன்புள்ளவர் என்று இது போதிக்கிறது
   b. இரட்சிப்புக்கு மதம் போதாது என்று போதிக்கிறது
   c. சபையில் மட்டுமே மறுபடியும் பிறக்க முடியும் என்று போதிக்கிறது
2. புதிய பிறப்பு நமக்குக் கிடைக்கும் வழி எது ?
   a. இரத்த சம்பந்தத்தினாலே
   b. மாம்ச சித்தத்தினாலே
   c. தேவனின் கிரியையினாலே
3. ''கிறிஸ்தவன் என்பவர்'' யார் ? (ஏதேனும் **இரண்டைக்** குறிக்கவும்)
   a. விசுவாச அறிக்கையை வைத்திருப்பவர்
   b. புதிய பிறப்பைப் பெற்றிருக்கிறவர்
   c. சட்டதிட்டங்களைப் பின்பற்றுகிறவர்
   d. தெரிந்த உபதேசத்தில் நிலைத்திருப்பவர்
   e. கிறிஸ்து அவனுக்குள் ஜீவிக்கும் அனுபவம் உடையவர்
4. யோவான் 1:13–ல் 'இரத்தத்தினால் அல்ல' என்பதன் பொருள் என்ன ?
   a. தந்தை விசுவாசியாக இருந்தால், மகனும் விசுவாசியாக மாறிவிடுவான்
   b. புதிய பிறப்பு மாம்ச சித்தத்தின் மூலம் வருகிறது
   c. புதிய பிறப்பு குடும்ப வழியின் மூலமாக வருவதில்லை
5. யோவான் 1:13–ல் 'மனுஷசித்தத்தினால் அல்ல' என்பதன் பொருள் என்ன ?
   a. ஒரு போதகர் உன்னை இரட்சிக்கலாம்
   b. புதிய பிறப்பு மனிதனால் அல்ல, தேவனால் மட்டுமே வருவதாகும்
   c. ஞானஸ்நானம் அல்லது கர்த்தரின் பந்தி உன்னை இரட்சிக்கலாம்
6. மனிதன் மனந்திரும்புவதற்கு, தேவன் எப்பொழுதும் பயன்படுத்துவது எது ?
   a. பிரசங்கியார்
   b. தேவ வார்த்தை
   c. தொலைக்காட்சி நிகழ்ச்சி
7. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது மனிதனின் பொறுப்பு என்று எந்த வசனங்கள் காண்பிக்கிறது ?
   a. யோவான் 7:17
   b. யோவான் 1:12
   c. ரோமர் 8:16

**8.** ஒரு நபர் எப்பொழுது மறுபிறப்பு அடைகிறார் ?

a. வேதத்தை ஒவ்வொரு நாளும் வாசிக்கும்பொழுது

b. ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும் பொழுது

c. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்பொழுது

**9.** புதிய பிறப்பைக் குறித்து கீழே உள்ள வசனங்கள் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. யோவான் 3:3 ----------------------------------------------------------------

b. 1 பேதுரு 1:23 ----------------------------------------------------------------

c. 2 கொரிந்தியர் 5:17 ----------------------------------------------------------------

**10. பொருத்துக :–** புதிய பிறப்பு என்றால் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| ------------ | உனக்குள் தேவனுடைய ஜீவன் இருக்கிறது | a. யோவான் 1:13 |
| ------------ | உனக்குள் புதிய சுபாவம் இருக்கிறது | b. 2 கொரிந்தியர்5:17 |
| ------------ | தேவனின் கிரியையாகும் | c. 2 பேதுரு 1:4 |
| ------------ | உன்னை தேவன் புதிய மனுஷனாக மாற்றியிருக்கிறார் | d. 1 யோவான் 5:12 |

**11.** ஒவ்வொருவரும் ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதற்காக **மூன்று** காரணங்களைத் தரவும்.

a. --------------------------------------------------------------------------------

b. --------------------------------------------------------------------------------

c. --------------------------------------------------------------------------------

**12. பொருத்துக:–** கிறிஸ்தவன் என்பதற்கான அடையாளம் என்ன ? (சரியான வசனத்தை வார்த்தைக்கு முன் எழுதவும்)

| | | |
|---|---|---|
| -------------- | புதிய மனுஷன் | a. 1 யோவான் 2:3 |
| -------------- | கீழ்ப்படிதல் | b. 2 கொரிந்தியர் 5:17 |
| -------------- | பிற விசுவாசிகளை நேசித்தல் | c. யோவான் 15:18,19 |
| -------------- | நேர்மையாய் வாழ்தல் | d. 1 யோவான் 2:19 |
| -------------- | தொடர்ந்து விசுவாசித்தல் | e. 1 யோவான் 3:14 |
| -------------- | உலகத்திலிருந்து பிரித்தெடுத்தல் | f. 1 யோவான் 2:29 |

13. யோவான் 3:3 முதல் 8 வசனங்கள் வரை மனப்பாடமாக எழுதவும்.

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________